Nandanam-Kottur boat service.

* 447 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that the Slum Clearance Board is operating Boat Service between Nandanam and Kottur Adyar in Madras ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ and இ) : தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றுவாரியம் சென்னை நந்தனத்திற்கும் கோட்டூர்புரத்திற்கும் இடையே படகுப்போக்குவரத்து ஒன்றை செயல்படுத்தி வந்தது. 19—10—73 முதல் இப்படகு போக்குவரத்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. அந்நாள் முதல் சென்னை மாநகராட்சி இப்படகு போக்குவரத்தை செயல்படுத்தி வருகிறது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, அந்தப் படகு விடுவதில் பொதுமக்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, 5 காசுகள் வசூல் செய்யப்படுகிறது.

Labour Welfare Fund.

* 448 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the amount available at present in the Labour Welfare Fund; and

(*b*) the details of the operation and working of that fund ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தொழிலாளர் நல நிதியில் 25—1—74 வரையிலும் உள்ள இருப்புத் தொகை ரூ. 16,74,792·95 ஆகும்.

(இ) தொழிலாளர்கள், அவர்களைச் சார்ந்துள்ளோர் ஆகியோரின் நலனை மேம்படுத்த அவ்வப்போது அரசால் குறிப்பிடப்படக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நிதியில் நிலைபெற்றுள்ள பணத்தைப் பயன்படுத்தலாம்.

1974 மார்ச் 15]

திரு. என். கே. பழனிசாமி : இதற்காகச் சட்டம் வந்து ஒரு வருஷந் தான் ஆகிறது. இந்தப் பணம் எவ்வாறு செலவு செய்யப்படுகிறது ? அதற்கு ஏதாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த நிதி சமுதாய-சமூக நலக் கல்வி நிலையங்கள் ; வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, சமுதாயத் தேவை கள் ; கேளிக்கை-ஏனைய பொழுதுபோக்கு முறைகள் ; உடல் நலந்தேறி வரும் காச நோயாளிகளுக்கு நலம்பேண் இல்லங்கள் , நலவிளைவிடங்க ளில் விடுமுறை இல்லங்கள ; தொழிலாளர் மனைவியர்க்கு பகுதிநேர வேலை வாய்ப்பு ; பாலர் பள்ளிகள் ; தொழிலாளர்களின் குழந்தைகளுக் குச் சத்துணவளித்தல் ; உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் ; இச்சட்டத்தின் பணிகளுக்காக நியமிக்கப்படும் பணியாளருக் காகும் ஊதியங்கள் ; படிகள் உட்பட இச்சட்டத்தைச் செயற்படுத்தலுக்கு ஆகும் செலவு ; தொழிலாளரின வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வனவும் அவர்களின் சமூக நிலையைச் சீராக்குவதுமானவை என்று வாரியம் கருதுகின்ற பிற நோக்கங்கள் ஆகியவற்றுக்குப் பயன்படுத்தலாம் என்று வரையறுக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தொழிலாளர் நல நிதிக்கு தொழிலாளர் களிடமிருந்து வசூல் செய்யும் பங்குத் தொகைக்கு அரசாங்கத்திலிருந்து ரசீது வழங்கப்படுகிறது. இப்போது அவர்களிடையே ஒரு எண்ணம் இருக் கிறது. பணம் கொடுத்ததற்கு எதும் சான்று இல்லாமல் போவதால் அதற்கு ஏதாவது ஒரு முறையை அரசாங்கம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அரசிடத்திலிருந்து ஒவ்வொரு நிதி பெறும்போதும் ரசீதும் தரப்படுகிறது. கணக்குகள் வைக்கப்படுகின்றன.

திரு. கே. எ. வகாப் : இப்படிப்பட்ட தொழிலாளர் நல நிதிகள் கைத்தறி நெசவாளர்கள், பீடித் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படு கிறதா ? அப்படி இருந்தால் அதனுடைய விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தத் தொழிலாளர் நல நிதியைப் பொறுத்த வரை தொழிற்கூடங்களில் வேலை செய்பவர் களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தொழில் அதிபர்களிடமிருந்தும் தொழிலாளர்களிடமிருந்தும் தொகைகள் பெற்று காரியங்களை ஆற்றி வருகிறது. அரசு ஐந்து லட்சம் ரூபாய் மானியமாகத் தந்திருக்கிறது.

Employees State Insurance Hospital for Mettur.

* 449 *Q.*— THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the stage at which the proposal to construct a hospital under the Employees' State Insurance Scheme at Mettur stands at present ?